அஷ்டாவக்ர - ஜனக சம்வாதமாம்

அஷ்டாவக்ர கீதை

(ஸம்ஸ்க்ருத மூலத்தின் மொழிபெயர்ப்பு.)

- பாரத்வாஜ விஸ்வநாதன்

அஷ்டாவக்ர - ஜனக ஸம்வாதமாம்

அஷ்டாவக்ர கீதை

(ஸம்ஸ்க்ருத மூலத்தின் மொழிபெயர்ப்பு.)

- பாரத்வாஜ விஸ்வநாதன்

Nov. 1937.

[உரிமை பதிவுசெய்யப்பட்டது]

இளங்கோவடிகள் கல்விக் கழக அச்சுக்கூடம், வாலாஜாபாத்.

முன்னுரை

வேதாந்த விஷயத்திற் சந்தேக விபரீதங்கள் தீர்ந்து அனுபவத்தில் நிலைபெற முயலும் சாதகர்க்கேற்ற மனனக்கிரந்த மிதுவென்று ரிபுகீதையைப் பற்றிப் பெரியாரொருவர் கூறியுள்ளார். மோக்ஷமார்க்கத்தைக் காண்பிக்கும் வேதாந்த நூல்கள், சாதாரணமாக, நூலின் உத்தேசம், தாத்பர்யம், குருசிஷ்யலக்ஷணம், சாதன சதுஷ்டயம், அவஸ்தாத்ரயம், பஞ்சகோசவிவேகம், தத்வமஸியுபதேசம், நிர்விகல்பஸஹஜஸமாதிகள், ஜீவன்முக்தனியல் முதலாம் விஷயங்களை வரிசையாய் விளக்குவன. அவ்வாறின்றி, முற்கூறிய ரிபுகீதையின் வர்க்கத்தைச் சேர்ந்தவிந்நூலின் அடி முடி நடுவெல்லாம் அதீத நிலையொன்றையே காணலாம். அன்னியங்காணா அத்துவித வுயர்நிலையிலுறையும் உத்தம ஞானிகள் தமது சீரியநிலைவிட்டுத் தாழ்ந்துவர மாட்டார்கள் என்பதற்கு இவ் வஷ்டாவக்ரகீதை தக்கதோர் சான்றாகும்.

உண்மைநிலை "என்று மெவர்க்கு மியல்பா"யுளதென்றும், ஆதலின் அதையுறப் பிறமுயற்சி யொன்றும் வேண்டுவதில்லை யென்றும், நினைப்பிற் கெட்டாவந்நிலை எதனையும் நினையாது சும்மா விருத்தலாலேயே விளங்குமென்றும் இதனிற் கூறப்பட்டுளது.

"பற்றற்றுப் பணியற்று மாசற்ற சுயம் பிரகாசனே நீ. (மற்றும்) சமாதி பழகுகிறாயே அதுவே நின் பந்தம்" I. 15.

"எங்கு மெக்காலுந் தியானத்தை யொழி. சித்தத் தொன்றுங் கொள்ளற்க. நீ விடுபட்டவனாக, ஆத்மா வாகவே யிருக்கிறாய். நினைப்பாலாவதென்?" XV. 20.

"அனைத்துங் கற்பனையே; ஆத்மாவோ கட்டற்ற பழம் பொருள், என்றுணர்ந்த தீரன் சிறுனைப்போல் என்ன பழகுவது?" XVIII. 7.

என்று உத்தமாதிகாரிக்கு உபதேசிக்கும் இந்நூல்,

"மனோ நிக்ரகம் முதலாங் காரியத்தை அஞ்ஞானி கைவிடுவனேல், அக்கணமே அவன் மனோராஜ்யங்கள் புரிந்து வீண்வார்த்தை யாடநேரும்." XVIII. 75.

என்று பந்தாதிகாரிகளை எச்சரிக்கிறது.

மேலும் சாதகன் எவ்வாறொழுக வேண்டுமென்னும் விளக்கத்துடனேயே நூல் தொடங்குவதையுங் காண்க. முதலத்யாயத்தின் மூன்றாவது நான்காவது சுலோகங்களில் ஆத்மானாத்ம விவேகமும், தேகாத்ம பாவத்தை யொழித்து போதாத்மாவாய் நிற்கும் நிலையும் உபதேசிக்கப்பட்டுள.

ஸஹஜ ஞானியின் சீரிய நிலை மணமே இந்நா லெங்குங் கமழும்.

"எல்லையிலாக் கடலா மென்னிடம் உலகக் கப்பல் மனக்காற்றால் இங்குமங்கும் அலைகிறது. (அதனால்) எனக்கொன்றும் வருத்தமில்லை." VII. 1.

என்பதால் அகண்டானுபவத்தே நிலைநின்றோனுக்கு உல கத் தோற்றத்தால் எவ்விகற்பமு மில்லை யென்றும்,

"எனது சுயவடிவம் ஒளியேயன்றி வேறன்று, உலகம் ஒளிருங்கால் (உண்மையில்) நானே யொளிர்கின் றேன்." II. 8.

என்பதால் உலகந் தோன்றுங்காலும் அதற்காதாரமாம் ஞானாத்மாவாகவே அவனிருப்ப னென்றும், ஆதலின்,

"கருமமுழைவு எவ்வாறு அறியாமையினாலோ அவ் வாறேதான் அதைத் துறத்தலும் என்னுமிவ் வுண் மையை நன்குணர்ந்து இவ்வாறே நான் நிலைத்துளேன்." XII . 6.

என்றவாறு, அவன் நிவிருத்தியை விழைதலும், பிரவி ருத்தியை வெறுத்தலுஞ் செய்யானென்றும் இதனுட் கூறப்பட்டுளது.

" உற்றதைக் கொண்டு பிழைப்பவனும், நாடெங் கும் யதேச்சையாய் நடப்பவனும், அஸ்தமித்தவிடத் திற் படுப்பவனுமாந் தீரனுக்கு எங்கும் சந்தோஷமே." XVIII. 85.

“ஈச்சங் குருத்துண்டு இன்புறும் யானையை வேப்பிலை மகிழ்வியாதது போலத் தன்னுளே யுவப்பவனை இவ்விஷயங்களெவையும் என்றுங் களிப்பிக்க மாட்டா.”

XVII. 3.

“மேனியால் எதனையுந் தொடாமலே தொன்று தொட்டுலகுதாங்கும் எனக்கு நிகர் சமர்த்தனெவன்? நானே நான்! என்னை வணங்குகிறேன்.” II. 13.

இவைமுதலாயின எத்தகையதோர் உவகைப் பெருக்கிலிருந்து உதித்த கவிதைகளா யிருத்தல்வேண்டும்!

அஷ்டாவக்ர கீதை

வரலாறு.

முன்னொருகால் ஜனகன் தனது ஆஸ்தான வித்வானிடம் சிரவணஞ் செய்து கொண்டிருந்த வேதாந்த நூலொன்றில், "குதிரையேறு மொருவன் சேணத்தின் ஒரு சுவட்டிற் காலூன்றி மற்றொன்றிற் காலெடுத்து வைக்கும் நேரத்திற்குள் பிரஹ்ம ஞான முறலாம்" எனனுமோர் வசன மிருந்தது. இமைப்பொழுதில் ஞான முறலா மென்பதே அதன் தாற்பரியம். அத்துடன் ஜனகன் பாடத்தை நிறுத்திக்கொண்டு பண்டிதரை நோக்கி, "இவ் வாக்கியத்தின் உண்மையைத் தாங்கள் நிரூபித்தல் வேண்டும். குதிரை கொண்டுவரச் சொல்லவா?" என வினவினான். ஞானானுபவத்தை யருள்வது தன்னாலாகா தெனப் பண்டிதர் தாழ்ந்தார். அவ் வசனம், ஒன்று பொய்யாகவோ, அல்லது மிகையாகவோ விருத்தல் வேண்டு மென்றான் மன்னன். "இவ் வாக்கியத்தை நிரூபித்தல் என்னாலாகா தென்பதனால் அது பொய்யெனலாகாது. மெய் யுணர்ந்த ஆன்றோர் வாக்கன்றோ அது!" என்றார் பண்டிதர். அரசன் அதிருப்தியுஞ் சினமுங் கொண்டு பண்டிதரைச் சிறைச்சாலைக் கனுப்பினான். அவ்வாறே அவ்வாக்கியத்தை நிரூபிக்க வியலா அறிஞர் யாவரையும் ஒவ்வொருவராகத் தலைமை வித்வானுக்குத் துணையாக அனுப்பிவந்தான்.

VI

இந்நிலையில் வயதிற் சிறியவரும், அறிவிற் பெரியவரும், வடிவில் எண்கோண லுற்றவருமாம் முனிவரொருவர் ஜனக ராஜ்ய எல்லைக்குட் காணப்பட்டார். அஷ்டாவக்ர ரென்பது அவரது காரணப்பெய ரென்பது மிகத்தெளிவாம். கற்றோரனைவரையும் ஒவ்வொருவராகச் சிறைப்படுத்தி வரும் அரசனது வரலாற்றைக் கேள்வியுற்ற அஷ்டாவக்ரர் தான் அரசனைச் சமாதானப்படுத்தி அறிஞர்களை விடுவிப்பதாக வாக்களிக்கவே, மக்களிற் சிலர் அவரை யோர் பல்லக்கில் அரண்மனைக்கிட்டுச் சென்றனர்.

சபையை யணுகும் முனிவரை அரசன் எழுந்து வணங்கிக் கௌரவித்தான். பண்டிதர்களைச் சிறைப்படுத்துங் காரணத்தை அஷ்டாவக்ரர் அரசனிடம் நேரிற் கேட்டறிந்து கொண்டதும், அவர்களனைவரையும் விடுவிக்கச் சொன்னார். ஜனகனும் தனதையத்தைத் தீர்க்க வல்லவனாம் ஒருவனே இவ்வாறு தன்னைக் கேட்டுக் கொள்ளக் கூடுமென் றுணர்ந்து, அறிஞர் யாவரையும் விடுவித்தபின் முனிவரை நோக்கி, "குதிரை கொண்டு வரச் சொல்லவா?" எனவினவினான். அதற்கவர், "அரசே! அவசரப்படேல். நாங்கள் கோரும் உண்மையை யுணர்த்தற் குரிய தனியிட மொன்றிற்குப் போவோம்" என்றார்.

VII

அஷ்டாவக்ரர் பல்லக்கிலும் அரசன் புடைசூழக் குதிரையிலுமாகக் கானகஞ் சென்றனர். காடு சமீபித்ததும் முனிவர், "அரசே! நின்பரிவாரங்கள் யாவுந் திரும்பிப் போகட்டும். நாமிருவர்மட்டுந் தனித்திருப்போம்." என்றார். அவ்வாறே செய்தபின் மன்னவன் குதிரைமீது சேணத்தின் ஒரு சுவட்டைமிதித்துக் கொண்டு, "முனியரசே! கிருபைபுரிக!" என வேண்டினன். அஷ்டாவக்ரரோ அமைதியுடன், "அரசே! தாங்கள் கூறும் நூலிலேயே இவ்வுண்மை குருவினிற் சீடனுக் கருளப்படுமெனக் கூறியுள்ளீரே! நாமிப்போது அத்தகைய சம்பந்தத்தோ டிருப்பது உறுதிதானோ?" எனக் கேட்டார். ஜனகன் முனிவரைவணங்கிச் "சீடனானேன். அருள்புரிக" என்றான். மீண்டும் முனிவர், "ஜனகா! உண்மைச்சீடன் தன்னையுந் தனதையுங் குருவுக்கர்ப்பிக்க வேண்டுமே!" எனலும், அரசன் "அவ்வாறே" என்றான். அஷ்டாவக்ரரும், "அவ்வாறே!" என்றியம்பிக் கணத்தில் மறைந்தேகினார். ஜனகன் ஸ்தம்பித்துப் போனான். இருந்த விடத்திலேயே சிலையென நின்றான். பொழுதாயிற்று. அஸ்தமித்து இருளெங்குஞ் சூழ்ந்தது.

நெடுநேரங் காத்திருந்தும் மன்னன் திரும்பாமை கண்ட குடிகள் கவலைமிகுந்து அவனைத் தேடலுற்றனர்; காட்டினுட் சென்று தம்பமெனநிற்கும் மன்னவனைக்

கண்டனர். அவரோ ஜனத்திரளையோ அதன் வினைக்களையோ உணரவேயில்லை. மக்கள் அரசனது நிலைமையைக் கண்டு வியப்பும் வருத்தமு முற்றனர். அஷ்டாவக்ரரோ எங்குங் காணப்படவில்லை. அவரோர் மாயாவியென்று மந்திரிகளும் பிறருஞ் சினமுற்றனர்; அரசனைப் பல்லக்கில் அரண்மனைக்கிட்டுச் சென்றனர். அவனது நிலையில் யாதொரு மாறுதலுங் காணப்படவில்லை. அரசனைப் படுக்கவைத்து அமைச்சர் கவலையுடன் காத்திருந்தனர். மறுநாட்காலையும் அரசன் அவ்வாறே யிருத்தல் கண்ட அமைச்சர் அஷ்டாவக்ரரைக் கண்டுபிடித்துக் கொண்டுவரத் தூதர்களை யேவினர்.

அஸ்தமித்ததும் தூதர்களிற் சிலர் அஷ்டாவக்ரரைக் கொண்டுவந்து சேர்த்தனர். முதன் மந்திரி அவர் மீது மிகவுங் கோபமுற்றிருந்துங் காரிய சாதகங்கருதி அதை வெளிக்காட்டாது, அரசனது பரிதாபகர நிலைமையையும் அது பற்றிய பொதுஜனத் துயரையுங் கவலையையும் அவருக்கு விளக்கிக்கூறி அரசனை மீண்டும் சுயநிலைக்குக் கொண்டுவர வேண்டுமென மன்றாடினன். அரசனது இந்நிலைமைக்கு அஷ்டாவக்ரரே காரணமென்று அமைச்சர் கூறலும், முனிவர், "அரசனையே நேரில் அதுபற்றி வினவுங்கள்" என்றார். மந்திரிகள் அது அசாத்திய மெனவே, அஷ்டாவக்ரர் அரசனை "ஜனக!" எனக் கூப்பிட்டார். அரசனும், "ஸ்வாமீ!" என்று

அவரை வணங்கினான். அமைச்சர் திகைத்தனர். முனிவர் மீண்டும் அரசனை நோக்கி, "ஜனகா! நானுன்னைப் பரிதாபகர நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டதாக இவர்கள் பகர்கின்றனரே! இது உண்மைதானா, சொல்." என்றார். ஜனகன் "யாரப்படிச் சொல்வது?" என வெகுண்டான். மந்திரிகள் பிரதானிகள் யாவரும் நடுங்கினரேனும், மன்னனை நன்னிலையுறுத்த முனிவரை மீண்டும் வேண்டினர். "அவ்வாறாயின் அரசனை என்னுடன் தனியேவிட்டு அனைவரும் அகலுங்கள்" என்றார் முனிவர்.

தனிமையில் முனிவர் மன்னனை நோக்கி, "ஜனகா! நீயே னிவ்வாறிருக்கிறாய்? உலகியலுக்கு மாறாக நடப்பதேதற்கு? எல்லோரையும் போலவே யிருப்பதுதானே" என்றார். "ஐயனே! நான் உம்மவன். உமதாணைப் படியே நடப்பேன்" எனவிடையளித்தான் மன்னவன். "பிரஹ்மஞானம் நற்பக்குவிகட்கே புகட்டற்பாலது. இதுவரையுன்னைச் சோதித்தேன். உரைவருந்திவா. பின்னர்ப்பேசலாம்" என்றார் அஷ்டாவக்ரர். அவ்வாறே யுண்டபின் ஜனகன், "பிரஹ்மானுபவ முறுவ தெவ்வாறு? விடுதலைவழி யாது?" என்று முனிவரை வினவினான். "பிரஹ்மம் உன்னினும் வேறும் அன்னியமன்று. அதையுணரத் தேசகாலமேதுமில்லை. அதுவே நீ அதுவே எல்லையிலா நித்யபரிபூரண ஆத்மா" என்றபடியே

சித்தார் அஷ்டாவக்ரர். அன்றிரவு ஜனகனுக்கும் அஷ்டாவக்ரருக்கும் நிகழ்ந்த சம்பாஷணையே அஷ்டாவக்ர கீதை.

மறுநாட்காலை அரண்மனை சார்ந்த அமைச்சர் அரசன் எப்போதும் போலவே ஸஹஜமாயிருப்பது கண்டு சந்தோஷமுற்று முனிவரை வாழ்த்தினார். அரசன் தனது சபையைக்கூட்டி என்றும் போன்றே தன் வேலையில் ஈடுபட்டான். அச்சபையில் அஷ்டாவக்ரர் அரசனை நோக்கி, "வேந்தே! நூல்களிற் கூறியவாறு கணத்தில் ஞானுனுபவ முறுவதுபற்றி, அம் தெங்ஙனங் கூடுமென ஐயமொன்றிருந்ததே. இப்போதெப்படித் தோன்றுகிற தென்று சபையோர்க் கியம்பல்வேண்டும்" என்றுரைத்தார். மிக்க வணக்கத்துடன் அரசன், "ஐயனே!, எனதையம் முற்றிலுந் தவறானது. எனது அபக்குவத் தாலேயே சாஸ்திர வாக்கியத்தின் உண்மையைச் சந்தேகித்தேன். அதன் ஒவ்வொரெழுத்தும் உண்மையே." என்றொப்புக்கொண்டான்.

அஷ்டாவக்ர கீதை

அத்யாயங்களின் விவரம்

குறிப்பு:-

அஷ்டாவக்ர முனிவருக்கும் ஜனகமஹிபனுக்கும் நிகழ்ந்த சம்வாதவடிவாம் இக்கீதை இருபது அத்யாயங்கள் கொண்டது. இவற்றுள் 1, 3, 5, 8, 9, 10, 11, 15, 16, 17, 18, என்னும் இப்பதினோரத்யாயங்கள் அஷ்டாவக்ருடைய உபதேசம். 2, 4, 6, 7, 12, 13, 14, 19, 20, என்னும் இவ்வொன்பதத்யாயங்கள் ஜனகன் குருவருளாற் சுவானுபவ முரைத்தலாம்.

அத்யாயம்.		பக்கம்.
I	(அஷ்டாவக்ரர்) ஜனகனுக்குச் சொருப லக்ஷணத்தை விளக்கி ஸஹஜஞானத்தை யுபதேசித்தல்.	1
II	(ஜனகன்) தத்துவதுட்ப முணர்ந்து வியப்புடன் சுவானுபவ முரைத்தல்	4
III	(அஷ்டாவக்ரர்) புறப்பற்றையும் அகப்பற்றையும் நிந்தித்து ஞானியினியல்பைப் பகர்தல்.	7
IV	(ஜனகன்) ஞானநிலையின் பெருமையை யுரைத்தல்.	9

V (அஷ்டாவக்ரர்) உலகும் உலகானுபவங்களும் கற்பனையென்று அனைத்திலுஞ் சமத்துவ முற்றுச் சொரூபத்திற் கரைந்து போவென் றுபதேசித்தல். 10

VI (ஜனகன்) வரையற்ற ஜடவுலகிற்கு ஆதாரமா யிருப்பவனே யானாதலின், அதனைத் தள்ளலுங் கொள்ளலும் ஒழித்தலு மில்லை யெனல். 11

VII (ஜனகன்) அகண்டானுபவத்தேநிலை பெறின் உலகத் தோற்றத்தாற் சாதக பாதகங்கள் எவையுமில்லை யென்றும், அதன்பால் விருப்போ வெறுப்போ உண்டாகா தென்றும் உரைப்பது. 12

VIII (அஷ்டாவக்ரர்) பந்தமுக்திகளின் இயல்பைக்கூறி, அகந்தையற்று எதனையுந் தள்ளாது கொள்ளா திருத்தல் வேண்டுமெனல். 13

IX (அஷ்டாவக்ரர்) இரட்டைகளை விடுத்தலாற் பரஞானம் உதயமாமென்றும், ஸம்ஸ்கார நாசமே ஸம்ஸார நாசமென்றும், அதுவே யுண்மை நிலை யென்றும் போதிப்பது. 14

X (அஷ்டாவக்ரர்) நிலையாதனவாம் அறம் பொருளின்பங்களை அறவே நீத்து, அவா வற்று ஓய்ந்து சுகமேயிருத்தல்வேண்டு மென்றுபதேசித்தல். 15

XI (அஷ்டாவக்ரர்) உலகியல் முழுதும் பிரகிருதியின் தர்மமென்றும், நினைப்பே துக்கத்தின் காரணமென்றும், அனைத்திற்கும் ஆதாரமாம் ஆத்மாவில் நிலைத்தவனே சாந்தி சுகத்தை யடைவனென்றுங் கூறுவது. 16

XII (ஜனகன்) உடல்வாக்குளச் செயல்களில் முற்றிலும் பற்றற்றுத் தன்னிலை நிற்றலைப் பகர்வது. 18

XIII (ஜனகன்) இயல்பாம் சொரூப நிலையில் எவ்விகற்பமின்றி யின்புறும் அநுபவத்தை யுரைத்தல். 19

XIV (ஜனகன்) நினைப்பற்றிருத்தலே யியல்பாகி, அதனால் அவாவற்று உள்ளுணர்வில் நிலைபெற்றுச் சுதந்தரமா யுலவும் ஞானியின்போக்கை ஏனையோரறியொணா தென்றியம்புவது. 20

XV (அஷ்டாவக்ரர்) விஷய வேட்கையால் மறைந்து, அஃதற்றால் விளங்குவதும்,

தோன்றி மாறி மறையு முலகிற்கு ஆதாரமாவதுமாம் ஞானமயப் பரம்பொருளே நீ; அந்நீயொருவனே அனைத்தும்; ஆதலின் எவ்விகற்பும் எந்நினைப்புந் தியானலக்ஷ்யமுமற்றுச் சுகமேயிருவென் றுபதேசிப்பது. 21

XVI (அஷ்டாவக்ரர்) அனைத்தையும் மறத்தலாலேயே ஆத்மானந்த முறலாமென்றும், எம்முயற்சியுமற்ற நிர்விஷய நிலையே நிகரிலா வின்பநிலையென்றும், அதன்கண் நிலைபெற விருப்பு வெறுப்பற்று, நினைப்பற்று, நானெனதற்றிருத்தல் வேண்டுமென்றும் உபதேசிப்பது- 24

XVII (அஷ்டாவக்ரர்) ஆத்மாராமனது ஸமாஸானந்தத்தையும், உயரியல்பையுங் கூறுவது. 25

XVIII (அஷ்டாவக்ரர்) அனைத்தையுந் துறந்து என்று மெவர்க்கும் இயல்பாம் தன்னிலையிற் சும்மாவிருத்தலே சுகமென்றும், பிற சாதனைகள் சிறுவர்க்கே யென்றும், தன்னிலை நின்றவன் உலகவிலக்ஷணன், அவனுக்கு எக்கடமையும் இரட்டையும், விகற்பமு மில்லையென்றும், ஜீவன் முக்தனது இயல்பு விசித்திரமானது, தீரர்களாம் பாமரர்க்குந் தீரரும் அவனுக்கும் வெகுதூர

மென்றும், சுதந்தமே நற்கதியளிப்பதென்றும், ஞானியின் கட்டற்ற வியல்புநிலையே சாதகரின் நியம நிலையைக் காட்டிலும் அழகியதென்றார், ஞானியை ஞானியே யறிந்த விடலு மென்றும், விருப்பு வெறுப்புகள் தோன்றுதற்கு அன்னிய மேதுமே யின்றி எந்நிலையிலும் ஏகமாம் அவனதனுபவம் உரைக்கொணா தென்றும், அவன் வாழ்விலுஞ் சாவிலும், தனிமையிலும் ஜனக் கூட்டத்திலும் மெய்ப்பொருளில், நிலைத்தவனாய்ச் சமனாயிருப்பா னென்றும் உரைப்பது. 28

XIX (ஜனகன்) அனுபவ ஞானத்தால் விகற்ப நினைவனைத்தையுங் களைந்து சுயமஹிமையில் நிலைத்துள தனக்கு அதையன்றி வேறொன்றுமேயில்லையெனச் சுவானுபவ முரைத்தல். 42

XX (ஜனகன்) தூயவறிவாந் தன்னிடங் கருவி காரணாதிகள், இரட்டைகள், முப்புடி-கள், வினைகள், உலகம், ஜீவர்கள், மாயை, சம்சாரம், மோக்ஷம் முதலா மெதுவுமே யில்லையெனல். 43

ஓம்

தத் ஸத்

அஷ்டாவக்ர கீதை

அத்யாயம் 1.

ஜனகன்:—

1. இறைவ! ஞானத்தையும் முக்தியையும் அவா வின்மையையும் பெறுவதெப்படியென்று எனக் கருளல்வேண்டும்.

அஷ்டாவக்ரர்:—

2. அன்ப! முக்தியை நீ விரும்புவையேல் விஷயங் களை நஞ்செனத்தள்ளு; பொறுமை, நேர்மை, வாய்மை, தயை, திருப்தி யென்னு மிவற்றை அமுதெனப்பேண்.

3. மண், நீர், தீ, காற்று, வெளியென்னு மிவை நீயல்ல. முக்திபெற, இவற்றின் சாக்ஷியாகிய அறிவுருவாம் ஆன்மாவை யுணர்.

4. உடலை யொதுக்கி அறிவிலே யமைதியாய் நிலைத் தால் இப்பொழுதே நீ சுகமும் சாந்தியும் முக்தியும் பெற்றவனாவை.

5. அந்தணர் முதலாம் மரபுனக்கில்லை, ஆச்ரமமு மில்லை; பொறிகளுக்குப் புலப்படாது பற்றற்று வடிவற்று அனைத்தின் சாக்ஷியாயிலகுமதே நீ; சுகமாயிரு.

6. மனோமயமாம் தர்மா தர்மங்களும் இன்ப துன்பங்களும் உனக்கில்லை. செய்பவனும் அநுப விப்பவனும் நீ யல்லை. உத்தமனே! நீ என்றும் விடுதலை யுற்றவனே.

7. அனைத்தின் ஏக சாக்ஷியே நீ; நித்திய விடுதலை நிறைவே நீ; காண்பவனை அன்னியமாய்க் காண் பதே உனது பந்தம்.

8. செய்பவன் நானென்னும் அகங்காரப் பெருங் கரு நாகத்தாற் கடிபட்டனை; செய்பவன் நானல்லை யென்னும் நம்பிக்கை யமுதருந்தி இன்புறு.

9. தூய ஞான மொன்றே நானெனும் நிச்சய நெருப்பினால் அஞ்ஞானப் பெருவனத்தை யெரித் துத் துயரற்றுச் சுகமாயிரு.

10. எதனிடம் இம்மனைத்தும் கயிற்றரவுபோற் கற்பிதமா யிலகுமோ, அப்பேரின்பப் பெருக்காம் அறிவே நீ; சுகமே யிரு.

11. தன்னை முக்தனெனக் கருதுவோன் முக்தனே. பத்தனெனக் கருதுபவன் பத்தனே. "மதியெது வோ கதியதுவே" என்னுமிப் பழமொழி இங்கே யுண்மையாம்.

12. ஆத்மா சாக்ஷி, விபு, பூரணம், ஒன்று, விடுதலை வடிவு, தொழிலற்றது, பற்றற்றது, அவாவற்றது, அமைதிமயம்; மாயையால் ஸம்ஸாரிபோலிலகும்.

13. சிதாபாஸ (ஜீவ)னே நானென்னும் மயலொ ழிந்து வெளியும் உள்ளுமாம் பாவனையகன்று இரண்டற்ற நிச்சலபோதமாம் தன்னையே கருது.

14. தேகாபிமானக் கயிற்றால் வெகு காலங் கட்டுற்றனை. மைந்தா! அறிவே நானெனும் ஞானவாளால் அதைத் துணித்துச் சுகமே வாழ்.

15. பற்றற்றுப் பணியற்று மாசற்ற சுயப்பிரகாசனே நீ; (மற்றும்) சமாதி பழகுகிறாயே அதுவே நின் பந்தம்.

16. இப் படைப்பனைத்தும் உன்னால் வியாபிக்கப் பெற்றது, உன்னாலே திகழ்வது; தூய ஞானவடிவே நீ; அற்ப நினைப்புறாதே.

17. எதனையு மெதிர்பாராது, சித்த விகாரமற்றுச் சுமையற்று அகங்குளிர்ந்து, ஆழ்ந்த புத்தியுடன், குழம்பாது ஞானவாசனை மாத்திரனா யிரு.

18. உருவுற்றதெலாம் பொய்யென்றும், உருவற்றதே மாறாததென்றும் உணர். இவ் வுண்மை யுபதேசத்துடன் இனி யுனக்குப் பிறப்பில்லை

19. கண்ணாடியுள் வடிவத்தின் உள்ளும் புறமும் எவ்வாறு அதுவேயோ அவ்வாறே இவ் வுடலி னுள்ளும் புறம்பும் பரமேசனே.

20. குடத்தினுள்ளும் வெளியும் எங்கும் நிறைந்த ஏக வானமேபோல், சிருஷ்டித் திரளனைத்தினும் இலகுவது நீக்கமிலா நிறைவாம் சாசுவதப் பிரஹ்மமே.

முதலாம் அத்யாயம்

முற்றிற்று.

அத்யாயம் II.

---

1. படைப்பிற்கப்பால் மாசற்றிலகும் அமைதிமய அறிவே நானாயிருக்க, ஆகா! இத்தனை காலம் மயக்கத்தால் நான் ஏமாறிய தென்னே!

2. நானொருவனே இவ்வுடலை யொளிர்விப்பது போல் உலகையும் ஒளிர்விக்கிறே னாதலின் உலகனைத்தும் என்னது, அல்லது ஒன்றுமே யெனதல்ல.

3. உடலுடன் உலகையும் நீத்தலும், ஏதோவோர் நுட்பத்தாலே பரம்பொருளெனக்குத் துலங்குவ தென்னே!

4. அலைகளும் நுரை குமிழிகளும் நீரினும் வேறன்மை போன்றே ஆத்ம வெளிப்பாடாம் உலகம் ஆத்மாவினும் வேறன்று.

5. ஆயுங்கால் ஆடை நூல் மாத்திரமே யாதல் போல இப் படைப்பும் விசாரிக்குங்கால் ஆன்ம மயமே யாம்.

6. கருப்பஞ் சாற்றி லுண்டாகும் சர்க்கரை அதனாலே (சாற்றாலே)யே வியாபிக்கப்படுவதுபோல் உலகம் என்னிட முண்டாகி இடையறா தென்னால் வியாபிக்கப்பெறும்.

7. தன்னை யுணராமையால் உலகு தோன்றும்; தன்னை யுணரின் உலகு தோன்றாது. கயிற்றைக் காணாமையால் அரவு தோன்றும்; காணின், அரவு தோன்றாது.

8. எனது சுயவடிவம் ஒளியே யன்றி வேறன்று; உலகம் ஒளிருங்கால் (உண்மையில்) நானே யொளிர்கின்றேன்.

9. கிளிஞ்சிலில் வெள்ளியெனக் கயிற்றிற் பாம்பென வெயிலிற் கானலென அறியாமையால் அகிலம் என்பால் விகற்பிக்கப் பெற்றிலகுவ தென்னே!

10. என்னிடமிருந்து வெளிப்பட்ட வுலகு என்னிடமே யொடுங்கும்; மண்ணிற் குடமும் ஜலத்தில் அலையும் பொன்னிற் பணியும் போல.

11. பிரமன் முதற் புழுவரை யகிலத்தின் அழிவினும் அழிவின்றி நிற்கும் வித்தைகமிகும் யான் போற்றி!

12. உடலுற்றாலும் ஒருவனாயிலகும் நானே நான்! எனக்கே நமஸ்காரம். போதல் வருதல் எங்குமெனக்கில்லை. அகிலத்தும் பரந்து நிற்பவன் யான்.

13. மேனியால் எதனையுந் தொடாமலே தொன்றுதொட்டுலகு தாங்கும் எனக்கு நிகர் சமர்த்தனெவன்? நானே நான்! என்னை வணங்குகிறேன்.

14. என்னே நான்! என்னை வணங்குகிறேன். ஒன்றுமெனக்கில்லை; இன்றேல் மனவாக்குகளுக் கிலக்காம் அனைத்து மென்னதே.

15. அறிவான் அறிவு அறிபொருள் என்னு மிம்மூன்றும் உண்மையல்ல. அறியாமையால் இவை எங்கு விளங்குமோ அக் களங்கமிலாப் பொருளே யான்.

16. அந்தோ! துன்பத்தின் மூலம் துவிதம். அதற்கு "முன்னே காண்பது முழுவதும் பொய். ஏகமாம் தூய ஞான ரஸமே நான்" என்பதினும் வேறு மருந்தில்லை.

17. "ஞான மாத்திரன் யான்; அறியாமைபற்றி (தேகாதி) உபாதிகள் என்றுற் கற்பனை யுற்றனை" வென்று நிதம் ஆயுமெனக்கு விகற்பமிலா நிலை வாய்த்தது.

18. பந்த மெனக்கில்லை; மோக்ஷமுமில்லை. ஆதாரமற்ற குழப்பமும் அடங்கியது. என்னே! அகிலம் என்னிடமே யுளது; (ஆயினும்) உண்மையில் என்னிடமில்லை.

19. உடலுட னிவ்வுலகம் ஒன்றுமேயில்லை யென்றும் ஆத்மா தூய அறிவுமயமென்றுந் துணிந்தேன். ஆதலினிப்பொழுது கற்பனை யெதனிடம்?

20. சரீரமும் சுவர்க்க நரகங்களும் பந்த முக்திகளும் பயமும் – இஃதனைத்துங் கற்பனையே. ஞானாத்மாவாம் எனக் கிதனுலென்ன?

21. அஹோ! துவிதங் காரு வெனக்கு ஜனக்கூட்டமுங் காடுபோலாகியது. எதனிடம் யான் இன்புறுவேன்?

22. உடல் நானல்ல; எனக்குடலில்லை. ஜீவனும் நானல்ல; ஞானமே நான். வாழ்க்கை விழைவே என் பந்தமாயிருந்தது.

23. எல்லையிலாப் பெருங் கடலா மென்னிடம் மனமாங் காற்றெழுதலும் பற்பல வுலகத் திரைகள் திடீரென விந்தையாய்க் கிளம்புகின்றன.

24. எல்லையிலாப் பெருங்கடலா மென்னிடம் மனக்காற் றொடுங்கலும ஜீவனும் வியாபாரியின் உலகக் கப்பல் அழிவடைகிறது.

25. கரையிலாப் பெருங்கடலா மென்னிடம் ஜீவதரங்கங்கள் இயற்கையாகவே உண்டாகி மோதி விளையாடி யொடுங்குகின்றன.

இரண்டாம் அத்யாயம்

முற்றிற்று.

அத்யாயம் III.

---

1. அழிவிலா ஒன்றும் ஆத்மாவை உண்மையிலுணர்ந்த ஆத்ம ஞானியுந் தீரனுமாம் உனக்குப் பொருள் தேடுவதில் உவகை யெவ்வா றுண்டாகும்?

2. கிளிஞ்சி லென்றறியாததனால் வெள்ளித் தோற்றத்தில் ஆசையுண்டாவதுபோல், அந்தோ! ஆத்மாவை யுணராததனால் மோகத்தாற் காணும் விஷயங்களில் விருப்பமுண்டாம்.

3. கடலில் அலைகள் எதனிடம் இவ்வுலகு விளங்குமோ அதுவே நானென் றறிந்தபின்னும் ஏழை போல் நீ பதறுவதேன்?

4. எழில் மிகுந்த தூய வறிவாந் தன்னைக் கேள்வியுற்றுஞ் சிற்றின்பப் பற்று மிகுந்தோன் மாசுறுகின்றான்.

5. படைப் பனைத்திலுந் தன்னையும் தன்னிடம் படைப் பனைத்தையும் காணும் முனிவனுக்கும் மமகாரத் தொடர்பிருத்தல் மிகு விந்தையே!

6. அத்துவித வுயர் நிலையை நாடுந் தீவிர முமுக்ஷுவும் காம வயப்பட்டுக் காதல் பயின்று சீரழிதல் விந்தையே!

7. பலமிகக் குன்றி முடிவு காலத்தை யடுத்திருந்தும் ஞானப் பகையாய்க் கிளம்பிய தென்றறிந்த காமத்தை விழைதல் விந்தையே!

8. நித்யாநித்ய விவேகமுற்று இம்மை மறுமைகளில் விருப்பற்ற முமுக்ஷுவுக்கு மோக்ஷத்தின் பாற் பயமுண்டாதல் விந்தையே!

9. உபசரிக்கப் பெற்றாலுந் துன்புறுத்தப் பட்டாலும் தீரன் ஆத்மாவையே என்றுங் காண்பவனாய் மகிழ்வுஞ் சினமு முறான்.

10. இயங்குந் தன்னுடலைப் பிறனுடலெனக் காணும் பெருந்தகை புகழ்ச்சியிலும் இகழ்ச்சியிலும் எவ்வாறு குழம்புவன்?

11. இவ்வுலகத்தையும் மாயா மயமாய்க் குதூகல மற்றுக் காணும் மதியுரத்தோன் சாவுமிக நெருங்கினும் அச்ச முறுவனோ?

12. ஆத்மஞான நிறைவெய்தி அவாவின்மையிலும் பற்றற்ற மனத்தனும் மஹாத்மாவுக்கு எவரோ இணையாவர்?

13. தனதியல்பினாலேயே தோன்றும் தொன்று மில்லை யென்றுணர்ந்த மதியுரத்தோன் கொள்ளு தற்குந் தள்ளுதற்கு முரிய தொன்றைக் காண்பனோ?

14. இரட்டைகளும் மனவெழுச்சியும் அகத்தழுக்கு மகன்றோனுக்குத் தானே நேரும் அனுபவத்தால் துன்பமுமில்லை; மகிழ்வுமில்லை.

மூன்றும் அத்யாயம்

முற்றிற்று.

அத்யாயம் IV.

---

1. விஷயானுபவங்களுடன் விளையாடும் தீரனும் ஆத்ம ஞானியைச் சம்சார பந்தத்தைச் சுமக்கும் பாமாருடன் ஒப்பிடுதல், அந்தோ! தகாது.

2. இந்திரன் முதலாம் தேவர்கள் யாவரும் தீனர்களாய் எந் நிலையுற விருப்புவரோ, ஆங்குறையும் யோகி (அதனால்) மகிழாததென்னே!

3. புண்ணிய பாபங்களின் பரிசம் ஞானியி னுள்ளத்தைத் தீண்டுவதில்லை. புகை, வானத்தே படிந்ததுபோற் காண்கினும் படியாததுபோல.

4. இவ்வுலகனைத்தும் ஆத்மாவேயென் றுணர்ந்து சுதந்தரமாய் வாழும் மஹாத்மாவைத் தடை செய்யத் தக்கோனெவன்?

5. பிரமன்முதற் புழுவரை யுள்ள நால்வகைப் படைப்புக் கூட்டத்தில் வேண்டல் வெறுத்தல் களைத் துறக்குந் திறலோன் அநுபவ ஞானி யொருவனே.

6. உலகிறையாம் இரண்டிலாப் பொருளே தானென்று யாரோ ஒருவன் உணர்கிறான். அவன் சித்தம்போற் சஞ்சரிப்பன். எதனின்றும் பயம் அவனுக்கில்லை.

நான்காம் அத்யாயம்
முற்றிற்று.

அத்யாயம் V.

---

1. எதனோடும் பற்றுனக்கில்லை; தூயவனும் நீ துறக்க விரும்புவதேன்? திருசியத்திரளைக் கரைத்து இவ்வாறே நீ கரைந்துபோ.

2. கடலினின்று குமிழிகள்போல உன்னிட மிருந்து உலக முதிப்பதென்று, ஒன்றும் ஆத்மாவை யுணர்ந்து இவ்வாறே நீ கரைந்துபோ.

3. கயிற்றிரவுபோல் வெளிப்படையாய்க் கண்முன் தோன்றினும், அஃதோர் தனிப் பொருளன்மையின் அமலனும் உன்னிடம் உலகில்லையென்று இவ்வாறே நீ கரைந்துபோ.

4. இன்பதுன்பங்களிலும் ஆசை நிராசைகளிலும் வாழ்விலுஞ் சாவிலுங்கூடச் சமனாய்ப் பூரணனாய் இவ்வாறே நீ கரைந்துபோ.

ஐந்தாம் அத்யாயம்.

முற்றிற்று.

அத்யாயம் VI.

---

1. வானம்போல் எல்லையற்றவன் யான், உலகோ குடம் போன்ற ஜடம் என்னுமிதுவே ஞானம். ஆதலினிதனைத் தள்ளலுங் கொள்ளலும் ஒழித்தலுமில்லை.

2. மஹா சமுத்திரம் போன்றவன் யான்; உலகோ அலைபோன்றது, இதுவே ஞானம். ஆதலின் இதனைத் தள்ளலுங் கொள்ளலும் ஒழித்தலுமில்லை.

3. ஸிளிஞ்ஸில் போன்றவன் யான்; உலகக் கற்பனை வெள்ளிபோன்றது. இதுவே ஞானம். ஆதலின் இதனைத் தள்ளலுங் கொள்ளலும் ஒழித்தலுமில்லை.

4. அகிலப் படைப்பிலும் உள்ளவன் யானே. மேலும் அகிலப் படைப்பும் என்னுளே யுளது. இதுவே ஞானம். ஆதலி னிதனைத் தள்ளலுங் கொள்ளலும் ஒழித்தலுமில்லை.

ஆறும் அத்யாயம்

முற்றிற்று.

அத்யாயம் VII.

---

1. எல்லையிலாக் கடலா மென்னிடம் உலகக்கப்பல் மனக் காற்றால் இங்குமங்கும் அலைகிறது. (அதனால்) எனக்கொன்றும் வருத்தமில்லை.

2. எல்லையிலாக் கடலா மென்னிடம் இயற்கையால் உலகத்திரை யுண்டாயினும் ஒடுங்கினும், அதனால் வளர்வுந் தேய்வு மெனக்கில்லை.

3. எல்லையிலாக் கடலா மென்னிடம் ஜகமோர் கற்பனையே; நான் அமைதியன், வடிவற்றவன், என்னும் ஞானத்தே யான் நிலைபெற்றேன்.

4. ஆத்மா விஷயங்களிலில்லை; வரையற்ற மையற்ற ஆங்கே விஷயமில்லை - என்று பற்றற்று அவாவற்று அமைதியுற்ற யான் இதனில் நிலைபெற்றேன்.

5. நானோ ஞானமயன்; உலகோ இந்திரஜால நிகர். ஆதலின் எவ்வாறு எதனிடம் எனக்கு வேண்டல் வெறுத்தலுண்டாம்?

ஏழாம் அத்யாயம்

முற்றிற்று.

அத்யாயம் VIII.

---

1 எப்போது மனம் ஏதோ வொன்றை விரும்புவதும் வருந்துவதும், தள்ளுவதுங் கொள்ளுவதும், உவப்பதுஞ் சீறுவதும் உண்டோ, அப்போதே பந்தம்.

2. எப்போது சித்தம் எதையும் விரும்பாது வருந்தாது, தள்ளாது கொள்ளாது, மகிழாது சீறாதிருக்குமோ அப்போதே முக்தி.

3. எப்போது மனம் சில விஷயங்களிற் பற்றுறுமோ அப்போதே பந்தம். எப்போது சித்தம் எவ் விஷயத்திலுந் தோயாதோ, அப்போதே வீடு.

4. நானற்றபோழ்து விடுதலை; நானுற்ற காலை பந்தம் என்று விளையாடல்போ லறிந்து எதையுங் கொள்ளாது தள்ளாதிரு.

எட்டாம் அத்யாயம்

முற்றிற்று.

அத்யாயம் IX.

1. செய்ததுஞ் செய்யாததும் (பிற) இரட்டைகளும் எப்பொழுதெவனுக் கோய்ந்தன? என்றிங்கே யறிந்து உதாசீனமுற்றுச் சங்கற்பமற்று (சர்வத்) தியாகமே சிறந்ததென்றிரு.

2. அன்ப! ஏதோவோர் புண்ணியவான் உலகியலை யுணர்ந்து வாழ்க்கை வேட்கையும் போக விருப்பும் அறிதல் விருப்பும் அடங்கப் பெறுகிறான்.

3. இஃதனைத்தும் நிலையாதது, தாப மூன்றால் மாசுற்றது, சாரமற்றது, இகழ்ந்து தள்ளற்பாலதென்று நிச்சயித்தவன் சாந்தியடைகிறான்.

4. எங்கே மாந்தர்க்கு இரட்டைகளே யில்லையோ ஆங்கே காலமென்பதென்ன, வயதாவதென்ன? அவற்றைப் புறக்கணித்து நேர்ந்தவாறிருப்பவன் பூரணனாவான்.

5. மஹர்ஷிகளும், சாதுக்களும், யோகிகளும் வெவ்வேறு கொள்கையுற்றிருப்பதைக் கண்டு வெறுப்பெய்திய எவனே சாந்தியுறுன்?

6. உதாசீனம் சமத்துவமென்னும் யுக்திகளால் ஞான ஸ்வரூபானுபவத்தை யருளி உலகச்சுழலினின்றுங் காப்பவன் குருவன்றோ?

7. (பஞ்ச) பூதத் திரிபுகளைப் பூதங்களாகவே கண்டால் அக்கணமே நீ உண்மையிற் கட்டறுந்து சொரூப நிலை பெறுவாய்.

8. ஸம்ஸ்காரங்களே ஸம்சாரமென்று அவையனைத்தையும் விட்டுவிடு. வாதனை நீக்கத்தாலேயே சம்சார நீக்கமாம். உள்ளவாறுள்ளது இந்நிலையே.

ஒன்பதாம் அத்யாயம்
முற்றிற்று.

அத்யாயம் X.

---

1. காமப்பகையையும் இன்னாற் பின்னலாம் பொருள் விருப்பையுமொழித்து, இவ்விரண்டிற்கும் மூன்னதாம் தர்மத்தையும் விட்டு, அனைத்தினும் உதாசீனங் கொள்.

2 நண்பரும் நிலமுஞ் செல்வமும் வீடும் மனைவியுஞ் சுற்றமும் சம்பத்தனைத்தும் நாலைந்து நாட்களே. இதனையோர் கனவென மாயத் தோற்றமெனப் பார்.

3. எங்கெங்கே அவாவுளதோ ஆங்கே சம்சாரமென்றுணர். திடவைராக்கியமுற்று ஆசையற்றுச் சுகமே யிரு.

4. அவாவே பந்தம்; அஃதறுதலே முக்தி. உலகப் பற்றொழிதல் மாத்திரத்தால் அவ்வப்பொழுதே (ஆன்ம) அடைவின்புண்டாம்.

5. நீ ஒருவன், அறிவுமயன், தூயவன்; உலகோ அசத்துஞ் ஜடமுமாம். அவித்தையென்பதுவொன்றுமேயில்லை. ஆயினும் நீ அறிய விரும்புவதேன்.

6. பிறவிதொறும், ராஜ்யமும் மக்களும் பெண்டிரும் உடலும் சுகங்களும் (அவற்றிடை நீ) ஆர்வத்தோடிருந்தும் அழிந்தே போயின.

7. அறம் பொரு ளின்பம் யாவும் போதும்; உலகக் காட்டில் இவற்றால் மனம் அமைதியுறவில்லை.

8. எத்தனை பிறவிகள்தான் உடலாலும் மனத்தாலும் வாக்காலும் பாடுபடவில்லை? கருமம் துன்பம்; களைப்பைத் தருவது. ஆதலின் இப்போதாயினும் ஓய்ந்திரு.

பத்தாம் அத்யாயம்

முற்றிற்று.

அத்யாயம் XI.

---

1. ஆதலு மழிதலு மாம் திரிபு இயற்கையாலெனத் துணிந்தவன் திரிபற்றுத் துயரற்றுச் சுகமே அமைதியுறுவன்.

2. இறைவனே எல்லாம் புரிபவன், வேறெவரு மில்லையென இங்கே துணிந்தவன் அவாவனைத்தும் அகத்தே நீங்கி, சாந்தனாகி எதனிலுமொட்டான்.

3. சம்பத்தும் விபத்தும் (அவ்வக்) காலத்தே விதியாலேயே வருவனவெனத் துணிந்தவன் பொறிகள் நிலைக்கப்பெற்று என்றும் நிறைந்தவனாய் ஒன்றையும் விரும்பான்: வருந்தவுமாட்டான்.

4. இன்ப துன்பங்களும் ஜனன மரணங்களும் விதிவசமெனத் துணிந்து, தன்னாலாவ தொன்று மில்லையெனக்கண்டு கவலையற்றிருப்பவன் செய்தும் பற்றுான்.

5, நினைப்பாலன்றி வேறெவ்வாறுந் துக்கமிங்குறா தெனத் துணிந்து கவலைபற்று அனைத்தினும் ஆசை நீர்ந்தவனே இன்பமும் அமைதியு மெய்தி யவன்.

6. உடல் நானல்ல, என்னுடையதுமல்ல, அறிவே நான் எனத் துணிந்தவன் முக்தியுற்றவனே யென லாம். செய்ததையுஞ் செய்யாததையும் அவன் நினை யான்.

7. பிரமன் முதற் புழுவரை (அனைத்தும்) நானே யெனத் துணிந்தவன் அடைந்ததினின்றும் அடை யாததினின்றும் முற்றிலும் விலகித் திரிபற்றுத் தூயோனாயமைவன்.

8. பற்பல விந்தையதாம் இவ்வையம் ஒன்றுமே யின்றெனத் துணிந்தவன், ஒன்றுமே யிலதென வாதனையற்று (ஆத்ம) விளக்கமயமா யிலகுவன்.

பதினொன்றாம் அத்யாயம்

முற்றிற்று.

அத்யாயம் XII.

1. முதலில் உடல் வினைகளிலும், பின்னர் வாக்கை வளர்ப்பதிலும், அதன் பின் நினைப்பிலும் வெறுப் புற்று அதனால் இவ்வாறே நான் நிலைத்துளேன்.

2. சப்தாதி விஷயங்களில் உவகையின்மையாலும் ஆத்மாவின் காணுைத் தன்மையாலும் (முறை யே) விக்ஷேபமும் ஏகாக்கிரமுமின்றி இவ்வாறே நான் நிலைத்துளேன்.

3. விபரீதத் தோற்றம் முதலியவற்றால் மனம் சித றும்பொழுதே சமாதி முயற்சியுமென்னும் நிய தியை யுணர்ந்து இவ்வாறே நான் நிலைத்துளேன்.

4. தள்ளுதலுங் கொள்ளுதலு மின்மையாலும், அவ்வாறே உவத்தலும் நோதலு மின்மையாலும், பிரஹ்மமே! இவ்வாறே நான் நிலைத்துளேன்.

5. ஆச்ரமம் ஆச்ரமமின்மை, தியானம், அகப்பற் றெழித்தல், என்னுமிவற்றால் வரு விகற்கங்களுதி இவ்வாறே நான் நிலைத்துளேன்.

6. கரும முனைவு எவ்வாறு அறியாமையினுலோ அவ்வாறே தான் அதைத் துறத்தலும் என்னுமிவ் வுண்மையை நன்குணர்ந்து இவ்வாறே நான் நிலைத் துளேன்.

7. நினையொணுததை நினையப்புகின் அது நினைவு வடிவே யுறுதலின் பிரஹ்ம பாவனையையுந் துறந்து இவ்வாறே நான் நிலைத்துளேன்.

8. இவ்வாறெவன் செய்வனோ அவன் கிருத கிருத்யன். இவ்வாறே தன்னிய லெவன் சார்வனோ அவனே கிருத கிருத்யன் (செய்து முடித்தவன்).

பனிரண்டாம் அத்யாயம்
முற்றிற்று.

அத்யாயம் XIII.

---

1. ஒன்றுமின்மையிலுள்ள தன்னிலையின்பம் கோவணமட்டுங் கொண்டவனுக்குமின்மையின் தள்ளலுங் கொள்ளலுமின்றி இன்பமயமா யிருக்கின்றேன்.

2. சிலகால் உடல் வருந்துகிறது; சிலகால் நாவு நோகின்றது; சிலகால் மனம் துன்புறுகின்றது. ஆதலின் இவற்றை நீத்து விடுதலைநிலையிற் சுகமே யிருக்கின்றேன்.

3. உண்மையில் நான் எதையுஞ் செய்பவனலன் என்று நன்குணர்ந்து எப்பொழுது எதைச்செய்ய நேருகின்றதோ அதைச்செய்து இன்பமயமா யிருக்கின்றேன்.

4. உடல்பொருந்திய யோகிக்கே கருமம் கருமநீக்கம் பந்தம் முதலாம் பாவனைகள். யோகமும் வியோகமும் எனக்கின்மையின் இன்பமயமா யிருக்கின்றேன்.

5. இருத்தல் நடத்தல் படுத்தலால் எனக் கெது வும் ஆவதும் போவதுமில்லை. (ஆதலின்) நின்றும் நடந்தும் படுத்தும் இன்பமயமா யிருக்கின்றேன்.

6. தூங்குவதால் யான் இழப்பதொன்றில்லை; முயல்வதால் அடைவதொன்றில்லை; ஆதலின் அழிவும் உயர்வுமற்று இன்பமயமா யிருக்கின்றேன்.

7. விஷயங்களிற் சுகம் முதலியவற்றிற்குங் குறித்த வடிவமின்மையைப் பலகாற் கண்டு, நல்லது தீய திரண்டையும் நீத்து இன்பமயமா யிருக்கின்றேன்.

பதின்மூன்றும் அத்யாயம்
முற்றிற்று.

அத்யாயம் XIV.

---

1. தப்பித்தவறி விஷயத்தை நினைந்தாலும் இயற் கையில் எவன் நினைப்பற்றவனோ, துயிலில் விழிப் பூட்டப் பெற்றவன் போன்ற அவனே சம்சாரச் சுழற்சியற்றவன்.

2. அவாவற்றுப் போயினதால் எனக்குச் செல்வ மோ நட்போ விஷயப்பகையோ, நூலோ, அறி வோ எங்குளது?

3. பரமாத்மாவும் ஈசனுமாகிய சாக்ஷி புருஷனை யறிந்தபின் பந்த விடுதலையிலும் அவாவற்றதால் மூக்தி சிந்தை எனக்கில்லை.

4. உள்ளே விகற்பமொழிந்து வெளியே சுதந்தரமாயுலவும் ஞானியின் - பித்தனது போன்ற - அவ்வந் நிலைமைகளை அத்தகையோரே யறிவர்.

பதினான்காம் அத்யாயம்

முற்றிற்று.

அத்யாயம் XV.

---

1. ஸத்வ புத்தி உண்மை யுபதேசத்தாற் கிருதார்த்தனாகிறான். மற்றவன் ஆயுள் முழுதுந் தேடியும் மயங்குகிறான்.

2. விஷயச் சுவையறுதலே வீடு; விஷயச்சுவையே பந்தம்; ஞானம் இவ்வளவே. இஷ்டப்படி செய்து கொள்.

3. இவ் வுண்மை யறிவு வாசாலனும் மேதாவியும் முயற்சிமிக்கவனுமாம் ஒருவனை ஊமையையும் முழுமகனையுஞ் சோம்பேறியையும்போ லாக்குவதால் போக விருப்பினர் இதை விலக்குவர்.

4. உடல் நீ யல்லை; உடலுனக்கில்லை; புசிப்பவனும் புரிபவனும் நீ யல்லை. நீ ஞானமயன். என்றும் சாக்ஷி, தேவையற்றவன். சுகமே வாழ்.

5. விருப்பும் வெறுப்பும் மனத்தி னியல்புகள். உனக்கோ என்றும் மனமில்லை. திரிபும் விகற்பமு மற்ற ஞானாத்மாவே நீ. சுகமே வாழ்.

6. படைப்பனைத்திலுந் தன்னையும், தன்னிடம் படைப்பனைத்தையுங்கண்டு, நானெனதற்றுச் சுகமாயிரு.

7. கடலில் அலைகள்போல் எதனிடம் இவ்வுலகிலகுமோ அதுவே நீ; ஐயமில்லை. ஞான வடிவே! தாபமற்றிரு.

8. அன்பனே! நம்பு, நம்பு. இங்கே நீ மயங்காதே; மாயைக் கப்பாலாம் ஆத்மாவே, ஞானமயனும் இறைவனே நீ.

9. குணங்கள் சூழும் உடலே நிற்கிறது, வருகிறது, போகிறது. ஆத்மாவோ போவதும் வருவதுமில்லை. அதைப்பற்றி என் வருந்துகிறாய்?

10. உடல் பிரளய முடிவுமட்டுமிருக்கட்டும்; இன்றே போகட்டும். ஞானமே வடிவாம் உனக்கு அதனால் ஆக்கமேது, அழிவேது?

11. வரையற்ற பெருங்கடலாமுன்னிடம் உலகத்திரை இயல்பாகவே உதிக்கட்டும் அல்லது அடங்கட்டும் (அதனால்) உனக்குக் கூடுதல் குறைவில்லை.

12. அன்ப! ஞானமே நின் வடிவாகும். இவ்வுலகு உன்னிலும் வேறன்று. ஆதலின் யாருக்கெவ்வாறு எங்கே தள்ளலுங் கொள்ளலுமாங் கற்பனை?

13. அழிவற்றுத் தூய்யதாய் அமைதியாயிலகும் ஓரே ஞானவானமாம் உன்னிடம் பிறப்பெங்கே, வினையெங்கே; அகந்தைதானெங்கே (யுளது)?

14. எதை நீ கண்டாலும் ஒருவனும் நீயே அங்கு விளங்குகிறாய். பொன் மேகலையுந் தோள்வளையுஞ் சிலம்பும் பொன்னினும் வேறா யிலகுமோ?

15. இது நான். இது நானல்லவென்னும் பிரிவு பாட்டை முற்றிலுமொழித்து, அனைத்தும் ஆத்மாவேயெனத் துணிந்து, நினைப்பற்றுச் சுகமாயிரு.

16. உன்னை யுணராமையாலேயே அகிலமும் உண்டாகிறது. உண்மையில் நீ யொருவனே (இருக்கிறாய்). உனக்கயலாய்ச் சம்சாரியோ, சம்சாரமற்றவனோ ஒருவனுமில்லை.

17. இவ்வகிலமும் மயக்கமேயன்றி வேறன்றென்று துணிந்து, வாதனையற்று, ஆன்ம விளக்கமாத்திரமாயிருப்பவன் எதுவுமில்லாததுபோலவே அமைதியுறுவன்.

18. பவசாகரத்தின்கண் ஒருவனே யிருந்தான், இருக்கிறான், இருப்பான். உனக்குப் பந்தமுமில்லை, முக்தியுமில்லை. செய்துமுடித்தவனாய்ச் சுகமாயிரு.

19. ஞானமயனே! சங்கற்ப விகற்பங்களால் சித்தங் குழம்பாதே. ஆனந்தவடிவாந் தன்னிடம் ஓய்வுற்றுச் சுகமா யிரு.

20. எங்கு மெக்காலுந் தியானத்தையொழி. சித்தத்தொன்றுங் கொள்ளற்க. நீ விடுபட்டவனாக, ஆத்மாவாகவே யிருக்கிறாய், நினைப்பாலாவதென்?

பதினைந்தாம் அத்யாயம்

முற்றிற்று.

அத்யாயம் XVI.

---

1. பற்பல நூல்களைப் பன்முறை புகன்றாலுங் கேட்டாலும் அனைத்தையும் மறந்தலாலன்றித் தன்னிலை யின்பம் உனக்கில்லை.

2. போகத்தையோ, கன்மத்தையோ, சமாதியையோ நீ சார்ந்திரு. ஆயினும், அறிஞ! அவாவனைத்துமற்ற வுள்ளமே அளவிலா வுவகை யுனக்களிக்கும்.

3. (விஷயங்களில்) உழலுவதால் யாவருந் துன்புறுகின்றனர். இதை யாரும் உணர்வதில்லை. புண்ணியவானொருவன் இவ்வுபதேசத்தாலேயே பேரின்பம் பெறுவன்.

4. (கண்ணை) இமைத்துத் திறத்தற்கும் எவன் வருந்துவானோ சோம்பரிற் றலைசிறந்தவனும் அவனுக்கே இன்பம்; வேறெவர்க்குமில்லை.

5. அறம்பொரு ளின்பம் வீடுகள்பற்றி, இது செய்தோம் இது செய்யவில்லை யென்னும் இரட்டைகளினின்றும் மனம் விடுபடுமன்றே அது அவாவற்றதாம்!

6. விஷயத்தை வெறுப்பவன் விரக்தன்; விஷயத்தில் உழல்பவன் காமி. தள்ளலுங் கொள்ளலுமற்றவன் விரக்தனுமாகான், காமியுமாகான்.

7. விசாரணையற்ற நிலைமையையே தலமாகக் கொண்ட ஸம்ஸாரப் புதரின் மூலையாம் அவா வுயிர்த்துள மட்டுமே தள்ளலுங் கொள்ளலும் உள்ளவையாம்.

8. தொடங்குதலாற் பற்றும் விலகுதலால் வெறுப்புமே யுண்டாதலால் அறிஞன் இரட்டைகளற்றுக் குழந்தைபோல் இவ்வாறே நிலைத்திருப்பன்.

9. துன்பத்தைத் தொலைக்கும் விருப்பினால் அவா வுற்றவன் உலகியலைத் துறக்க விரும்புகிறான். அவாவொழிந்து விடுதலையுற்றோன் உலகிலிருந்தும் துன்புறான்.

10. எவனுக்கு முத்தியிலாயினும் விருப்புளதோ, அவ்வாறே உடலிலாயினும் எனதென்ப துளதோ, அவன் துயரையே நுகர்வோனேயன்றி ஞானியுமாகான், யோகியுமாகான்.

11. சிவனே, அல்லது ஹரியே, அல்லது பிரமனே யுனக்குபதேசனாயினும், அனைத்தையும் மறத்தலா லன்றிச் சுகநிலை நீ யெய்தாய்.

பதினாறாம் அத்யாயம்
முற்றிற்று.

அத்யாயம் XVII.

---

1. உள்ள நிறைவும் இந்திரிய வமைதியும் பெற்றுத் தனிமையிலெவன் என்று மின்புறுவனோ, அவனே ஞானப்பயனையும் யோகப்பயிற்சியின் பயனையு மெய்தினான்.

2. ஒருவனுந் தன்னுலேயே பிரமாண்டத் தொடரெலாம் நிறைந்துளபடியால் உண்மை யுணர்ந்தோன் இவ் வுலகில் எக்காலுந் துன்புறுன்.

3. களிரில் இன்புறும் யானையை வேப்பிலை மகிழ்வியாததுபோலத் தன்னுளே யுவப்பவனை இவ்விஷயங்களெவையும் என்றுங் களிப்பிக்கமாட்டா.

4. அனுபவித்த போகங்களில் வாதனையற் றிருப்பவனும் அனுபவியாதவற்றில் உதாசீனமாயிருப்பவனுமாம் ஒருவன் உலகிலே கிடைத்தற் கரியவன்.

5. இவ்வுலகில் போக விருப்பினையும் மோக்ஷ விருப்பினையுங் காணலாம். போகமோக்ஷமிரண்டையும் விழையாப் பெரியரோ மிகவரியர்.

6. அறம் பொரு ளின்பம் வீடு வாழ்வு சாவு முதலிய எவற்றிலும் ஏதோவோர் பெருந்தகைக்கு வேண்டலும் வெறுத்தலுமில்லை.

7. (அவனுக்கு) உலகந் தொலைவதில் விருப்புமில்லை; அஃது இருப்பதில் வெறுப்புமில்லை. அப் புண்ணியவான் நேர்ந்தவாறு வாழ்ந்து இன்பவடிவாயிருக்கிறுன்.

8. இவ்வாறு மனமொழிந்த தன்யன் "இஞ் ஞானத்தாற் கிருதார்த்தனுனே" னென்று பார்த்துங் கேட்டும் பரிசித்தும் முகர்ந்தும் அருந்தியும் சுகமாயிருப்பன்.

9. சம்சாரக்கடல் வறண்டவனது பார்வை குறியற்றும், செயல் உத்தேசமற்றும், பொறிகள் வேகமற்று மிருக்கும். விருப்பும் வெறுப்பும் அவனுக்கில்லை.

10. அவன் விழிப்பது முறங்குவது மில்லை. இமைப்பதுந் திறப்பது மில்லை; விடுபட்டோனிடமிலகும் பரநிலை யொன்றென்னே!

11. எங்குமவன் தன்னிலை நிற்பவனாய்த் தூயவகத்தினனாய்த் திகழ்வன். வாதனையாவும் விலகிய முக்தனு மெங்கும் பிரகாசிப்பன்.

12. பார்த்துங் கேட்டுந் தொட்டும் முகர்ந்தும் உண்டும் ஏற்றும் புகன்றும் சென்றும் வேண்டல் வெறுத்தல்களினின்றும் விடுபட்ட முக்தனே பெரியோன்.

13. அனைத்தினுஞ் சுவையற்ற முக்தன் (எதையும்) தூற்றான்; புகழான், மகிழான், கோபியான் கொடுத்தல் வாங்கல் அவனுக்கில்லை.

14. காதலுறும் பெண்ணைக் கண்டும் அணுகிவருஞ் சாவைக் கண்டும் உளங் கலங்காது தன் நிலை நிற்கும் பெரியோன் முக்தனேயாவன்.

15. அனைத்தினும் சம திருஷ்டியுடைய தீரனுக்கு இன்பிலுந் துன்பிலும் ஆணிலும் பெண்ணிலும், ஐஸ்வரியத்திலும் ஆபத்திலும் எவ் விசேடமு மில்லை.

16. உலகச் சுழலற்றவனிடம் வருத்தமில்லை. இரக்கமுமில்லை; செருக்கில்லை, தாழ்வுமில்லை; வியத்தலில்லை, குழப்பமுமில்லை.

17. முக்தன் விஷயங்களை வெறுக்கான், விழையவு மாட்டான். என்றும் பற்றற்ற வுளத்தினனாய் நேர்ந்ததையும் நேராததையும் ஏற்றுக்கொள்ளு கிறான்.

18. அகத்தே யொன்றுமிலான் ஏகாக்கிரம் விக்ஷேபம், நன்மை தீமையென்னும் விகற்பங்களை யுணரான். அவன் தனிப் பாநிலை பொருந்தினன் போலும்.

19. நானெனதற்று (உண்மையில்) எதுவுமில்லை யெனத் துணிந்து, உள்ளே யவாவற்றவன், செய்துஞ் செய்யாதவனே.

20. அகந்தை நழுவியவன் மனம் ஒளி, மயல், கனவு, அறியாமை முதலியவற்று ஏதோவோர் நிலையுற் றவனுவன்.

பதினேழாம் அத்யாயம்.

முற்றிற்று.

அத்யாயம் XVIII.

---

1. எதன் ஞானமுதித்தலும் மோகம் கனவு நிகரா மோ, இன்பமே வடிவாம் அவ் வமைதியொளி போற்றி!

2. உலகப்பொருள்கள் யாவையும் பெற்றுப் போகங்கள் செழிக்கப்பெறலாமாயினும், அனைத்தையுந் துறத்தலாலன்றிச் சுகவாறுதல் இயலாது.

3. கடமையாங் கடுவெயிலின் அனலால் உள்ளம் பொசுங்கியவனுக்குச் சாந்தி யமுததாரைப் பொழிவை விட்டுச் சுகமெங்கேயுளது?

4. இப்படைப்பு கற்பனை மாத்திரமே; உண்மையிலொன்றுமில்லை. இருப்பையு மின்மையையும் உணருந் தன்மையோர்க்கு இன்மை யென்றுமில்லை.

5. விகற்பமும் வருத்தமும் மாறுதலும் மாசு மற்றதனது நிலை தொலையுமில்லை, அருகுமில்லை. ஆஃதென்றும் அடையப்பட்டதேயாம்.

6. மயக்கமட்டும் விலகித் தம்மையே மீண்டும் பெற்றோர் பார்வை மூட்டமற்றுத் துயரற்றுத் துலங்குவர்.

7. "அனைத்துங் கற்பனையே; ஆத்மாவோ கட்டற்ற பழம்பொருள்" என்றுணர்ந்த தீரன் சிறுவனைப்போல் என்ன பழகுவது?

8. நான் பிரஹ்மமென்றும், இருப்பு மின்மையுங் கற்பனைகளென்றும் துணிந்து அவாவற்றவன் எதை யறிவது? எதைச் சொல்வது? எதைச் செய்வது?

9. அனைத்தும் ஆத்மாவேயெனத் தீர்ந்து சும்மாவிருக்கும் (மோனத்திருக்கும்) யோகிக்கு "அது நான், இது நானல்ல" என்றும் விகற்பங்கள் ஒழிந்தனவாம்.

10. அமைதியுற்ற யோகிக்கு விக்ஷேபமில்லை, ஏகாக்கிரதையுமில்லை; மேதையில்லை, மடமையுமில்லை; சுகமில்லை, துக்கமில்லை.

11. விகற்பமிலாத் தன்னிலையுற்றோனுக்கு அரசாட்சியிலும் பிச்சையெடுத்தலிலும், லாப நஷ்டங்களிலும் ஜனத்திரளிலுங் காட்டிலும் விசேஷமொன்றுமில்லை.

12. "இதைச் செய்தோம், இதைச் செய்யவில்லை" என்னும் இரட்டையினின்றும் விடுபட்ட யோகிக்கு அறம் பொருளின்பங்களும் விவேகமும் எங்கேயுள?

13. ஜீவன் முக்தனும் யோகிக்குக் கடமையேதுமேயின்று. இதயத்தே பற்றுதலெதுவுமின்று. உள்ளவாறிருத்தலே இங்கவன் தொழிலாம்.

14. நினைப்பனைத்தின் முடிவிலே யிளைப்பாறும் பெருந்தகைக்கு மோகமெங்கே, உலகெங்கே, தியானமும், விடுதலையுமெங்கே?

15. உலகைக் காண்பவன் அஃதில்லையென்று சாதிக்கட்டும். (உலகைக்) கண்டுங் காணாதவனும் வாதனையற்றவன் எதைச்செய்வது?

16. பரம்பொருளைக் கண்டவன் அப் பரமே நானெனக் கருதுக. இரண்டாவதைக் காணாதவன் நினைப்பற்றவன்; எதை நினைவன்?

17. தன் விசேஷபத்தைக் காண்பவன் அதை யடக்குவன். பெரியார் விசேஷபமுறார். அடைதற்கொன்றின்மையின் அவர் எதைப் புரிவர்?

18. உலகத்தார்போல் நிலவினும் ஞானி அவர்களினும் மாறுபட்டவன். தனக்குச் சமாதியையோ விசேஷபத்தையோ களங்கத்தையோ அவன் காணான்.

19. நினைப்பும் நினைப்பின்மையுமற்று, வாதனையற்று நிறைவுற்றிலகுபவன் உலகப்பார்வையிற் பல புரிந்தும் (உண்மையில்) எதுஞ் செய்யாதவனே.

20. எப்பொழுதெதைச்செய்ய நேருகிறதோ அதைச்செய்து சுகமாயிருக்குந் தீரனுக்குப் பிரவிருத்தியிலாயினும் நிவிருத்தியிலாயினும் கஷ்டமேயில்லை.

21 வாதனையற்றுப் பற்றற்றுக் கட்டற்றுச் சுதந்தரமானவன் காற்றிற் சருகெனத் தொடங்கிய (பிராரப்த) வினையாலாடுவன்.

22. உலகியலற்றவனுக்கு எதனிடமுங் களிப்போ ஏக்கமோ உண்டாகாது. அவன் என்று மகங்குளிர்ந்து உடலற்றவனெனச் சுடர்வன்.

23. மாசற்றுக் குளிர்ந்து ஒளித்தினாய்த் தன்னுளே மகிழுந் தீரன் எதனையு மொழிக்கக் கருதான் அவனுக் கெங்கும் அழிவில்லை.

24. இயல்பாகவே உள்ளத் தொன்றுமிலனாய் நேர்ந்தவாறு நடக்குந் தீரனுக்குப் பாமரர்க்குள்ள மானவமானங்கள் இல.

25. இவ்வேலையைச் செய்வது உடலேயன்றித் தூயோனும் யானல்ல வென்னுங் கருத்தைப் பின் பற்றுபவன் செய்துஞ் செய்யாதவனே.

26. ஆர்வமற்றவன்போற் புரிவனாயினும் அவன் மூடனாகான். இன்பமயனும் ஜீவன்முக்தன் உலகி லுழலினும் திருமிகத் திகழ்வன்.

27. பற்பல ஆராய்ச்சிகளால் மிகக் களைத்து இளைப் பாறலுற்ற தீரன் எதையும் நினையான், அறியான், கேளான், பாரான்.

28. சமாதியும் விக்ஷேபமு மின்மையின் ஞானி முமுக்ஷுவுமாகான், பாமரனுமாகான். (உலகம்) கற்பிதமென நிச்சயித்து (அதைப்) பார்க்குங்கா லும் பிரஹ்மமாகவே யிருக்கிறான்.

29. எவனுக்கு உள்ளே அகந்தையுள்ளதோ அவன் செய்யானாயினும் செய்கிறான். அகந்தையற்ற தீரன் செய்தும் ஒன்றுஞ் செய்பவில்லை.

30. முக்தனது உள்ளம் குழப்பமற்றுக் குதூகல மற்றுத் தொழிலற்று அசைவற்று அவாவற்று ஐயமற் றவிரும்.

31, ஆலோசிக்கவோ தொழிற்படவோ முற்படாத வுள்ளம் எக்காரணமுமின்றி (ஒவ்வொருகால்) ஆலோ சிக்கும், வேலையுஞ் செய்யும்.

32. உண்மையை யுள்ளபடி கேட்கும் மூடன் மயக்க முறுகின்றான்; புத்திமானோ மூடனைப்போல் ஒடுக்க முறுகின்றான்.

33. (சித்த) ஓர்மையையும் அடக்கத்தையும் மூடர் மிகப் பழகுவர். தூங்கியவன்போலத் தன்னிலை நிற்குந் தீரர் செயற்பால தேதுங் காணார்.

34. முயற்சியினாலோ முயற்சியின்மையினாலோ மூடன் அமைதியுறுவதில்லை. அறிஞனோ உண்மை நிச்சயத்தினாலேயே சாந்தனாகிறான்.

35. அப் பழக்கத்தையே மேற்கொண்ட மாந்தரும் உலகற்று நோயற்றுத் தூயவறிவாய் அன்பு நிறைவாய்த் திகழுந் தன்மை யுணர்வதில்லை.

36. மூடன் அப்யாசவடிவாங் கன்மத்தால் விடுதலை பெறுவதில்லை. புண்ணியவானோ ஞானத்தினாலேயே விடுபட்டு விகாரமற்று நிலைநிற்பன்.

37. அதுவாக விரும்புவதால் மூடன் அப் பரம்பொருளை யடைவதில்லை. தீரனோ விரும்பாமலேயே பரம்பொருளே தானாயிருக்கிறான்.

38. ஆதாரத்தைவிட்டு, அடையவிரும்பும் அவிவேகிகள் பிறவிச் சுழலைப் பெருக்குவர். துன்பவேராம் இப் பிறவியின் வேரையே அறிஞர் அறுத்துவிடுவர்.

39. சாந்தியடைய விருப்புமதனால் மூடன் சாந்தியுறுவதில்லை; தீரனோ உண்மையைத் தேர்ந்து என்றும் மனமடங்கி யிருக்கிறான்.

40. காட்சியைப்பற்றி நிற்பவனுக்கு ஆன்மப் பார்வை எங்குண்டாம்? தீரர் அதையு மிதையுங் காணாது அழிவறு மான்மாவையே காண்பர்.

41. தன்னுளே யமைதியுறுந் தீரனுக்கே என்று மியல்பாயிலகும் உண்மை யொடுக்கம் கட்டுப்பாடியற்றும் மூடனுக்கு எங்ஙனம் நேரும்?

42. இருப்பை ஒருவன் நினைகிறான். மற்றொருவன் ஒன்றுமில்லையெனக் கருதுகிறான். வேறொருவன் இருபாவனைகளுமற்று இவ்வாறே கலக்கமற்றிருக்கிறான்.

43. மதிகெட்டவர்கள் மயக்கத்தால் இரண்டிலாத் தூயவான்மாவை யுணராது (மனத்தால்) அதைப் பாவிப்பதால் ஆயுள் முழுதும் அவர்களுக்கு அமைதியில்லை.

44. முமுக்ஷுவின் புத்தி பிடிப்பற்றிருப்பதில்லை. முக்தனது புத்தியோ எக்காலுஞ் சற்றும் பிடிப்பற்று அவாவுமற்றிலகும்.

45. விஷயப்புலிகளைக் கண்டு மிரண்டவர் அடைக்கலம் நாடி மனோநிக்ரகமும் ஏகாக்கிரமும் பெற வேண்டிச் சரீரமெனக் குகையில் நுழைவர்.

46. (ஸம்ஸ்கார) வாதனையற்ற சிங்கத்தைக் கண்டு விஷய யானைகள் ஓசையின்றி ஓட்டமெடுக்கின்றன; (ஓட) முடியாவிடிற் கெஞ்சிப் பணிகின்றன.

47. உளம் பொருந்தியவன் சந்தேகமுறான்; மோக்ஷதனைப் பேணான்; கண்டுங் கேட்டுந் தொட்டும் முகர்ந்தும் உண்டும் சுகப்போலிருப்பான்.

48. வஸ்து லக்ஷணத்தைக் கேட்டமாத்திரத்திற் புத்திதெளிந்து (மீண்டும்) கலங்காதவன் ஆசாரம் அநாசாரம் உதாசீனம் (முதலாம்) எதையுங் காணான்.

49. அவன் களங்கமிலனாய் நல்லதோ கெட்டதோ எப்பொழுதெதைச் செய்ய நேருகிறதோ அப்பொழுததைச் செய்வன். அவன் செயல் குழந்தையினது போன்றது.

50. சுதந்தரத்தாற் சுகப்படலாம். சுதந்தரத்தாற் பரமெய்தலாம். சுதந்தரத்தால் விடுதலைபெறலாம். சுதந்தரத்தாற் பரமபதமுறலாம்.

51. ஆன்மாவாந் தான் புரிபவனும் புசிப்பவனுமல்லனென ஒருவன் என்றுணர்கின்றானோ அன்றே மனநினைவனைத்தும் நசித்தே போகின்றது.

52. கட்டற்றதாயினுந் தீரனது இயல்புநிலையே அழகியது; அகத்தே யவாவுற்ற மூடனது செயற்கை யமைதி யன்று.

53. கற்பனையோய்ந்து பந்தமற்ற சுதந்தர மதியினராந் தீரர் மஹா போகங்களுடனு மிலகுவர்; மலைக் குகைகளினும் புகுவர்.

54. வேதியனையுந் தேவதையையும், க்ஷேத்திரத்தையும் வனிதையையும் அரசனையும் அன்பனையுங் கண்டும் வழிபட்டும் தீரனுக்கு இதயத்தே வாதனை யாதுமிராது.

55. பணியாளர், மக்கள், பெண்டிர், பேரர், உறவினர் முதலோர் சிரித்து அவமதிப்பினும் யோகி சிறிதும் விகாரமுறான்.

56. அவன் மகிழ்ந்தாலும் மகிழ்ந்தவனாகான்; வருந்தினாலும் வருந்தியவனாகான்; அவனது விந்தை நிலையவ்வதனை அத்தகையோரே யறிவர்.

57. செய்தாகவேண்டுமென்பதே சம்சாரம். ருணிய (பூரண) வடிவினராய், வடிவற்றவராய்த் திரிபற்றுத் தாபமற்றிலகும் ஞானிகள் கடமையைக் காணார்.

58. மூடன் (ஒன்றுஞ்) செய்யாவிடினுங் குழப்பத்தால் எதனினுங் கலங்குவான். சமர்த்தன் கடமைகளைச் செய்யுங்காலுங் கலங்கமாட்டான்.

59. விவகாரத்தின்போதும் மதி யமைதியுற்றவன் படுத்தாலும் வந்தாலும் போனாலும் பகர்ந்தாலும் நுகர்ந்தாலும் சுகமாகவே யிருப்பான்.

60. உலகப்போல் விவகரிப்பினுந் தனியியல்பாலே எவன் இன்னலற்றானோ, பெருமடிப்போற் கலக்கொண்டவனும் அவன் தூயாற் றெளிர்வன்.

61. வினை நீக்கமும் முமுக்ஷுகளுக்கு ஓர் வினையாக விளைகிறது. சீவனுக்கோ வினையும் வினைநீக்கத்தின் பயனை நல்கும்.

62. விஷயங்களிடம் வெறுப்பைப் பெரும்பாலும் அஞ்ஞானியிடங் காணலாம். உடலின் மீதே யவாவற்றவனுக்கு ஆசையேது, வைராக்கியமேது?

63. அஞ்ஞானியின் நோக்கு எப்போதும் நினைப்பு மறப்புகளில் அழுந்தியிருக்கும். தன்னிலையுற்றோனது நோக்கோ விஷயங்களை நினைத்தும் நினையாத தன்மையதாம்.

64. எம்முயற்சியிலும் விருப்பற்றுக் குழந்தைபோலொழுகுந் தூயோனும் மௌனி வினையாற்றுங்காலும் பற்றற்றான்.

65. பார்த்துங் கேட்டும் பரிசித்தும் முகர்ந்தும் உண்டும் அகத்தே யவாவிலனாய் நிலைமையாவிலும் நடு நிலைமையனாயிலகும் ஆத்ம ஞானியே புண்ணிய சாலி.

66. வானம்போலென்றுந் திரிபற்ற தீரனுக்கு உலகச் சுழலேது, தோற்றமேது, அடைவேது, அதன் சாதனமேது.

67. விஷயங்களை நீத்து வரையற்ற பரத்தில் இயற்கை நிலையுற்றோன் தற்சுவை நிறைவு வடிவனாய்ச் சிறப்பன்.

68. இதுபற்றிப் பலவாறுரைத்தென்? உண்மையுணர்ந்த பெரியோர் போகத்தையோ மோக்ஷத்தையோ கோரார்; எப்போதும் எதனிடமுங் களிப்பெய்தார்.

69. பெயரளவாய் வெளித்தோன்றும் மஹத் (தத்துவம்) முதலாந் துவித வெல்லைத் துறந்து தூய வறிவாயினோர்க்குங் கடமையொன்றெஞ்சியுளதோ?

70. மயக்கத்துகித்த இதுவெலாம் யாது மன்றென நிச்சயித்துக் குறியற்றுச் சுடருந் தூயோன் இயல்பாகவே அமைதியுறுவன்.

71. தூய சுடர் வடிவனைக் காண்பொருளேதுங் காணுனுக்கு விதியேது, விரக்தியேது, துறவேது, அடக்கமேது?

72. எல்லையிலாப் பொருளாய்ச் சுடர்பவனைப் படைப்பையே காணுகவனுக்குக் கட்டேது, விடுதலைதானேது, சுகமேது, துக்கமேது?

73. (உண்மை) அறிவு (உதிக்கு) மட்டுமே தோன்றும் படைப்பின் மாயையே பற்பலவாயுளது. (இதை யுணர்ந்த) ஞானி நானெனதற்று அவாவற்றிலகுவன்.

74. அழிவுந் தாபமுமற்ற தன்னையே காணும் மௌனிக்கு அறிவேது, அகிலந்தானேது, உடலேது, நானெனதேது?

75. மனோ நிக்ரகம் முதலாங் காரியத்தை அஞ்ஞானி கைவிடுவனேல் அக்கணமே அவன் மனோ ராஜ்யங்கள் புரிந்து வீண் வார்த்தையாட நேரும்.

76. மந்தன் உண்மைப் பொருளைக் கேள்வியுற்றும் மடமை யொழிவதில்லை; முயற்சியால் வெளியே விகற்பமற்றவனெனவும் உள்ளே விஷய சபலனாகவு மிருப்பன்.

77. ஞானத்தாற் கருமங் கழன்றவன் உலக நோக்கிற் கருமம் புரிந்தாலும், எதனையுஞ் செய்யவோ, சொல்லவோ அவனுக்கு அவசியம் நேருவதே யில்லை.

78. என்றும் விகாரமற்றுத் தாப நோயற்ற தீரனுக்கு இருளேது, ஒளியேது, எங்கேனுஞ் சற்றேனும் அழிவவனுக் கேது?

79. தன்மை யுரைக்கொணுதவனும், தன்மையிலனுமாகிய யோகிக்குத் தீரமேது, விவேகமேது, தாபமின்மைதானேது?

80. வானுலகில்லை, நரகமுமில்லை, ஜீவன்முக்தியிலவேயில்லை. மிக மிகக் கூறுத்லேன்? யோக நோக்கில் யாதுமே யில்லை.

81. தீரனது சீதள சித்தம் அமுதம் பெருகுவதாம், எவ்வடைவையும் அவன் வேண்டான்; அடையவில்லை யென்றும் வருந்தான்.

82. அவாவற்றவன் அமைதியுள்ளவனைப் புகழான்; தீயவனை யிகழவுமாட்டான்; இன்ப துன்பங்களிற் சமனுய் நிறைந்தவனுய்ச் செய்தற்குரிய தெதனையுங் காணுன்.

83. தீரன் உலகியலை வெறுக்கான்; ஆத்மாவைக் காணவும் விரும்பான். உவத்தல் வெருளல் முற்றிலுமற்றவனும் அவன் செத்தவனலன், பிழைத்திருப்பவனுமலன்.

84. ஞானி மக்கள் மனை முதலிய நட்பற்றவனாய் விஷயங்களி லவாவற்றவனாய்த் தனதுடலினுங் கருத்தற்றவனாய் எதனையும் விழையாதவனா யொளிர்வன்.

85. உற்றதைக் கொண்டு பிழைப்பவனும், நாடெங் கும் யதேச்சையாய் நடப்பவனும், அஸ்தமித்த விடத்திற் படுப்பவனுமாந் தீரனுக்கு எங்கும் சந்தோஷமே.

86. தன்னிலையாம் பூமியில் இளைப்பாறி உலகிய லனைத்தையும் மறந்த மஹாத்மாவுக்கு உடல் விழுந்தாலு மெழுந்தாலும் (அதுபற்றிக்) கவலை யில்லை.

87. ஒன்றுமிலனாய், இச்சைபோ லுலவுபவனாய், இரட்டையற்றவனாய், ஐய மறுத்தவனாய், எதனி லும் பற்றிலனாய்த் தானாய்த் தனித்தின்புறுவன் ஞானி.

88. தீரன் மமதையற்றவனாய், மண்ணுங் கல்லும் பொன்னுஞ் சமனாய், இதயக்கட்டு அறவே யறுந் தோனாய், ராஜத தாமத (குண)ங்கள் சிதறப்பெற்ற வனா யிலகுவன்.

89. எதனிலும் நாட்டமற்றவனுக்கு உள்ளத்தே வாதனை யாது மிராது. விடுதலைபுற்று நிறைவுற்றோ ருக்கு எவரையே நிகரென்பது?

90. அறிந்து மறியான், பார்த்தும் பாரான், பேசியும் பேசான் - வாதனையற்றவனினும் வேறு யார்?

91. பிச்சைக்காரனாயினும் அரசனாயினும் எவன் அவாவற்று, அனைத்திலும் நல்லது கெட்டதென்னும் எண்ணமற்றானோ அவனே சிறந்தவன்.

92. கள்ளமிலா நேர்மையனாய் வாழ்க்கை பயனுற்ற யோகிக்குச் சுதந்தரமேது, ஒடுக்கமேது, தத்துவ நிச்சயந்தா னேது?

93. தன்னுளே இளைப்பாறி நிறைவெய்தி ஆசையற்றுத் துயரற்றவன் உள்ளே யனுபவிக்குபவதை எப்படி யெவருக் குரைப்பது?

94. எவ்வெந் நிலையிலுந் திருப்தியுறுந் தீரன் தூங்கியுஞ் சுழுத்தியுறான்; கனவிலுந் தூக்கமுறான்; விழிப்பில் விழிப்புமுறான்.

95. ஞானி நினைவுறினும் நினைவற்றவன்; புலன்களோடிலகினும் புலனற்றவன்; புத்திமானாயினும் புத்தியற்றவன்; அகந்தையோடிலகினும் அகந்தையற்றவன்.

96. அவன் சுகியுமல்ல துக்கியுமல்ல, பற்றற்றவனுமல்ல பற்றுளோனுமல்ல, முமுக்ஷுவுமல்ல முக்தனுமல்ல, சற்றேனும் எதுவுமாகான்.

97. தன்யனுமவன் குழப்பத்திற் குழம்பான்; சமாதியி லொடுங்கான்; ஜடத்தன்மையிலும் ஜடனாகான்; மேதைமிகுந்தும் பண்டிதனாகான்.

98. உள்ளவாறு தன்னிலை நின்ற முக்தன் செய்ததினின்றும் செய்யவேண்டியதினின்றும் விடுபட்டான். அவாவற்று எங்குஞ் சமனா மவன் செய்யாததையோ செய்ததையோ நினையான்.

99. அவன் வணங்கப் பெறுங்கால் மகிழ்தலும் வைதலுறுங்கால் வெகுளலுஞ் செய்யான். சாவின் பாற் சற்றும் பதற்ருன்: வாழ்க்கையிலுங் களி யான்.

100. புத்தி யமைதியுற்றவன் ஜனக்கூட்டத்திற்கோ காட்டிற்கோ ஓடமாட்டான். அவன் எங்கெங் குஞ் சமனுய் உள்ளவாறே நிலை நிற்பன்.

பதினெட்டாம் அத்யாயம்

முற்றிற்று.

அத்யாயம் XIX.

---

1. தத்வானுபவ ஞானமாம் முள்வாங்கி கொண்டு மனத்தகத்தினின்று பல்வகை யாலோசனைகளாம் முட்களை வெளியெடுத்தேன்.

2. சுய மஹிமையில் நிலைத்துளவெனக்கு அறம் பொரு ளின்பங்களேது? விவேக மேது? துவித மேது? அத்துவித மேது?

3. சுய மஹிமையில் நிலைத்துளவெனக்கு இறப் பெதிர்வு நிகழ்வுகளேது? இடமேது? என்றென்று மென்பதேது?

4. சுய மஹிமையில் நிலைத்துளவெனக்கு ஆத்மா வேது? அநாத்மாவேது? நன்மை தீமைகளேது? நினைப்பும் நினைப்பின்மையு மேது?

5. சுய மஹிமையில் நிலைத்துளவெனக்குக் கன வேது, துயிலேது, விழிப்பேது, துரியமேது, பய மேது?

6. சுய மஹிமையில் நிலைத்துளவெனக்குத் தொலை யேது, அருகேது, வெளியேது, உள்ளேது, தூல மேது, நுட்பமேது?

7. சுய மஹிமையில் நிலைத்துளவெனக்குச் சா வேது, வாழ்வேது, உலகங்களேது, உலகியலேது, ஒடுக்கமேது, சமாதியேது?

8. ஆத்மாவில் அமைதியுறுமெனக்குப் பேறுகள் மூன்றின் கதை போதும்! யோக வரலாறும் ஞான வரலாறும் போதும்! போதும்!

பத்தொன்பதாம் அத்யாயம்

முற்றிற்று.

அத்யாயம் XX.

---

1. மையற்ற என் சொரூபத்தில் பூதங்களேது, உடலேது, பொறிகளேது, மனமேது, சூனிய மேது, அவாவின்மை யேது?

2. என்று மிரட்டையிலா வெனக்குச் சாத்திர மேது, ஆத்ம ஞான மேது, நினைப்பிலா மனமேது, நிறைவேது, அவாவின்மையேது?

3. அறிவறியாமைகளேது, நானேது, இதுவேது, எனதேது, பந்த முக்திகளேது? சொரூபத்திற்கு வடிவேது?

4. என்றும் வருக்கொணுதிற் பிராரப்த வினைகளேது, ஜீவன்முக்தி யேது, விதேக முக்தி யேது?

5. புரிபவனேது, புசிப்பவனேது, வினையிலா விளக்கமேது? எக்காலுங் குறைமற்ற வெனக்கு அபரோக்ஷமும் அதன் பயனு மேது?

6. நானேயாம் ஒரே சொரூபத்தில் உலகெங்கே, முமுக்ஷுவும் யோகியும் ஞானியும் பக்தனும் முக்தனு மெங்கே?

7. நானே யாம் ஒரே சொரூபத்திற் படைத்தலும் அழித்தலுமேது? சாதிக்தற் குரியதும் சாதனையும் சாதகனும் சித்தியு மேது?

8. அறிபவனும் அறிநெறியும் அறிபொருளும் அறிவுமேது? என்றுந் தூயோனுமெனக்கு ஒன்றென்பதும் ஒன்றுமில்லை யென்பது மேது?

9. என்றும் வினையிலா வெனக்குச் சிதறலுங் குவிதலுமேது? அறிவறியாமைகளேது? மகிழ்வுந் துயருமேது?

10. எப்போதும் நினைப்பிலா வெனக்கு இவ் விவகாரமேது? அப் பரமார்த்தமேது? சுக துக்கங்களேது?

11. என்றும் மாசிலாவெனக்கு மாயையேது, சம்சாரமேது, விழைவும் வெறுப்புமேது? ஜீவனும் அதுவெனும் பிரமமுமேது?

12. மாறாப் பரம்பொருளினும் வேறலாதென்றுந் தானாயிருக்கு மெனக்குப் பிரவிருத்தியேது, நிவிருத்தியேது? பந்தமேது, விடுதலையேது?

13. உபாதியற்ற சிவமா மெனக்கு உபதேசமேது, சாத்திரமேது? சீடனேது, குருவேது, அடைதற்குரிய பேறுதானேது?

14. இருப்பேது, இன்மையேது, ஒன்றேதிரண்டேது? பலவாறிப்படிக் கூறுவதெதற்கு? எனக்குமுன் எதுமேயில்லை.

இருபதாம் அத்யாயம்

முற்றிற்று.

இளங்கோவடிகள் கல்விக் கழக அச்சுக்கூடம், வாலாஜாபாத்.

அஷ்டாவக்ர கீதை

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை	திருத்தம்
XII	21	பரல்	பால்
XVI	12	உபதேசிப்பது-	உபதேசிப்பது.
2.	11	நிச்சப	நிச்சய
,,	17	முக்தனே .	முக்தனே;
7	11	ஒருடுங்களும	ஒருநிங்களும்
,,	22	போருள்	பொருள்
8	5	அலைகள்	அலைகள்போல்
,,	8	மிருக்க	மிருக்
9	16	துன்பமுமில்லை;	துன்பமுமில்லை,
15	24	விரும்புவேதன்	விரும்புவேதன்?
18	17	விகற்கங்	விகற்பங்
22	14	றே	றே வின்றே
23	4	நான்.	நான்,
24	20	அவாவற்றதாம்!	அவாவற்றதாம்.
25	17	தேசனு	தேசகனு
26	1	பே	யே
,,	4	தளிரில்	ஈச்சங் குருத்தன்றி
27	7	பொன்	பொனை
,,	16	கோபியான்	கோபியான்;
,,	19	தன்நிலை	தன்னிலை
,,	23	ஜஸ்	ஜச்
28	15	மணம்	மணம்,
,,	16	வற்று	வற்ற
30	3	தூக்கமி	தூக்கமுமி
,,	22	காணாதவன்	காணாதவன் —
,,	23	பற்றவன்;	பற்றவன் —
31	15	கூட்ட	கட்ட
33	5	முடன்	மூடன்
39	22	வெருளால்	வெகுளால்